ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமோழி

# 4.1 – கதிராயிரம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 4.1 – கதிராயிரம்

‡ கதிர் ஆயிரம் இரவி ⋆ கலந்தெரித்தால் ஒத்த நீள் முடியன் ⋆
எதிர் இல் பெருமை இராமனை ⋆ இருக்கும் இடம் நாடுதிரேல் ⋆
அதிரும் கழற் பொரு தோள் ⋆ இரணியன் ஆகம் பிளந்தரியாய் ⋆
உதிரம் அளைந்த கையோடிருந்தானை ⋆ உள்ளவா கண்டார் உளர் ॥ **4.1.1** ॥

நாந்தகம் சங்கு தண்டு ⋆ நாண் ஒலிச் சார்ங்கம் திருச் சக்கரம் ⋆
ஏந்து பெருமை இராமனை ⋆ இருக்கும் இடம் நாடுதிரேல் ⋆
காந்தள் முகிழ் விரல் சீதைக்காகிக் ⋆ கடுஞ்சிலை சென்றிறுக்க ⋆
வேந்தர் தலைவன் சனகராசன் தன் ⋆ வேள்வியில் கண்டார் உளர் ॥ **4.1.2** ॥

கொலையானைக் கொம்பு பறித்துக் ⋆ கூடலர் சேனை பொருதழியச் ⋆
சிலையால் மராமரம் எய்த தேவனைச் ⋆ சிக்கென நாடுதிரேல் ⋆
தலையால் குரக்கினம் தாங்கிச் சென்று ⋆ தடவரை கொண்டடைப்ப ⋆
அலை ஆர் கடற்கரை வீற்றிருந்தானை ⋆ அங்குத்தைக் கண்டார் உளர் ॥ **4.1.3** ॥

தோயம் பரந்த நடுவு சூழலில் ⋆ தொல்லை வடிவு கொண்ட ⋆
மாயக் குழவி யதனை நாடுறில் ⋆ வம்மின் சுவடுரைக்கேன் ⋆
ஆயர் மடமகள் பின்னைக்காகி ⋆ அடல் விடை ஏழினையும் ⋆
வீயப் பொருது வியர்த்து நின்றானை ⋆ மெய்ம்மையே கண்டார் உளர் ॥ **4.1.4** ॥

நீர் ஏறு செஞ்சடை நீலகண்டனும் ⋆ நான்முகனும் முறையால் ⋆
சீர் ஏறு வாசகஞ்செய்ய நின்ற ⋆ திருமாலை நாடுதிரேல் ⋆
வார் ஏறு கொங்கை உருப்பிணியை ⋆ வலியப் பிடித்துக் கொண்டு
தேர் ஏற்றி ⋆ சேனை நடுவு போர் செய்யச் ⋆ சிக்கெனக் கண்டார் உளர் ‖ **4.1.5** ‖

பொல்லா வடிவுடைப் பேய்ச்சி துஞ்சப் ⋆ புணர்முலை வாய் மடுக்க
வல்லானை ⋆ மா மணிவண்ணனை ⋆ மருவும் இடம் நாடுதிரேல் ⋆
பல்லாயிரம் பெருந் தேவிமாரொடு ⋆ பௌவம் எறி துவரை ⋆
எல்லாரும் சூழச் சிங்காசனத்தே ⋆ இருந்தானைக் கண்டார் உளர் ‖**4.1.6** ‖

வெள்ளை விளிசங்கு வெஞ்சுடர்த் திருச் சக்கரம் ⋆ ஏந்து கையன் ⋆
உள்ள இடம் வினவில் ⋆ உமக்கிறை வம்மின் சுவடுரைக்கேன் ⋆
வெள்ளைப் புரவிக் குரக்கு வெல்கொடித் ⋆ தேர்மிசை முன்பு நின்று ⋆
கள்ளப் படைத்துணை ஆகிப் ⋆ பாரதம் கைசெய்யக் கண்டார் உளர் ‖ **4.1.7** ‖

நாழிகை கூறிட்டுக் காத்து நின்ற ⋆ அரசர்கள் தம் முகப்பே ⋆
நாழிகை போகப் படை பொருதவன் ⋆ தேவகி தன் சிறுவன் ⋆
ஆழி கொண்டன்றிரவி மறைப்பச் ⋆ சயத்திரதன் தலையை ⋆
பாழில் உருளப் படை பொருதவன் ⋆ பக்கமே கண்டார் உளர் ‖ **4.1.8** ‖

மண்ணும் மலையும் மறி கடல்களும் ⋆ மற்றும் யாவும் எல்லாம் ⋆
திண்ணம் விழுங்கி உமிழ்ந்த தேவனைச் ⋆ சிக்கென நாடுதிரேல் ⋆
எண்ணற்கரியதோர் ஏனம் ஆகி ⋆ இருநிலம் புக்கிடந்து ⋆
வண்ணக் கருங்குழல் மாதரோடு ⋆ மணந்தானைக் கண்டார் உளர் ‖ **4.1.9** ‖

‡ கரிய முகில் புரை மேனி மாயனைக் ⋆ கண்ட சுவடுரைத்து ⋆
புரவி முகம் செய்து செந்நெல் ஓங்கி ⋆ விளை கழனிப் புதுவை ⋆
திருவிற் பொலி மறைவாணன் ⋆ பட்டர்பிரான் சொன்ன மாலை பத்தும் ⋆
பரவு மனம் உடைப் பத்தர் உள்ளார் ⋆ பரமன் அடி சேர்வர்களே ‖ **4.1.10** ‖

அடிவரவு — கதிர் நாந்தகம் கொலை தோயம் நீரேறு பொல்லா வெள்ளை நாழிகை மண்ணும் கரிய அலம்பா

கதிராயிரம் முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்